**சார்பு நீதிமன்றம், அருப்புக்கோட்டை**
**முன்னிலை : திரு. வ. இராமலிங்கம், பி.எஸ்.சி., பி.எல்.,**
**சார்பு நீதிபதி, அருப்புக்கோட்டை**

**2023 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 27 ஆம் நாள் வெள்ளிக்கிழமை**

**வ.வி.எண்.6/2022 இன் எம்.சி.ஓ.பி.எண்.64/2019**

யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனி லிட் ... மனுதாரர்/2 ம் எதிர்மனுதாரர்

/எதிர்/

1. ஏ.உமாதேவி
2. மைனர்.ஏ.அஷ்டலட்சுமி
3. மைனர். ஏ. அர்ச்சனா
4. ஏ. ராஜம்மாள்
5. எம். அய்யாதுரை ... எதிர்மனுதாரர்கள்/ மனுதாரர்கள்

(மைனர் 2,3 எதிர்மனுதாரர்கள் தங்கள் அடுத்த சிநேகிதியும்
பாதுகாப்பாளருமான தங்களது தாயார் 1 ம் எதிர்மனுதாரர்மூலம்)

இம்மனுவானது இந்நீதின்றம் முன்பாக இறுதியான விசாரணைக்காக 23.12.2022 அன்று வந்தபோது மனுதாரர்தரப்பில் வழக்கறிஞர் திரு.ஏ.தர்மராஜ் அவர்கள் ஆஜரானநிலையிலும் எதிர்மனுதாரர்கள்தரப்பில் வழக்கறிஞர் திரு.என்.கண்ணதாசன், திருமதி.எல்.ஹேமலதா அவர்கள் ஆஜரானநிலையிலும் இருதரப்பும் கேட்கப்பட்டும் ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டும் இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

**உத்தரவு**

1. இம்மனுவானது மனுதாரர்/2 ம் எதிர்மனுதாரருக்கு எதிராக 04.07.2019 அன்று பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்யக் கோரி கட்டளை 9 விதி 7 மற்றும் பிரிவு 151 சிபிசி படி மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. மனுவின் சுருக்கம்:–

மனுதாரர் அசல் எம்.சி.ஓ.பி. மனுவில் 2 ம் எதிர்மனுதாரர். அசல் வழக்கில் கடந்த 04.07.2019 ம் தேதி 2 ம் எதிர்மனுதாரர்தரப்பில் வக்காலத்து தாக்கல் செய்வதற்காக வாய்தா ஏற்பட்டது. இந்நீதிமன்றத்திலிருந்து 2 ம் எதிர்மனுதாரருக்கு அனுப்பப்பட்ட அழைப்பாணையானது 2 ம் எதிர்மனுதாரர் கிளை நிறுவனம் உள்ள கரூர் கிளை நிறுவனத்திற்கு அனுப்பப்பட்டு, அங்கிருந்து விருதுநகர் கிளைக்கு அனுப்பத்

தவறியதால் 04.07.2019ம் தேதி 2ம் எதிர்மனுதாரரால் வக்காலத்து தாக்கல் செய்ய இயலவில்லை. அதனால் 04.07.2019ம் தேதி 2ம் எதிர்மனுதாரருக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி தவறானது வேண்டுமென்றே ஏற்பட்டதல்ல. தெய்வாதீனமானது. எனவே 2ம் எதிர்மனுதாரருக்கு எதிராக 04.07.2019ம் தேதி பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்து உத்தரவிட வேண்டும்.

3. <u>எதிர்மனுதாரர்தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மறுப்புரையின் சுருக்கம்:–</u>

மனு சட்டப்படியும் சங்கதிகள்படியும் நிலைநிற்கத்தக்கதல்ல. அசல் மனுவில் 1ம் எதிர்மனுதாரரின் கணவரான அருணாச்சலம் சாலை விபத்தில் இறந்தது சம்பந்தமாக நஷ்டஈடு கோரி மனுதாரர்/2ம் எதிர்மனுதாரர் மற்றும் இதர எதிர்மனுதாரர்கள்மீது மனுத்தாக்கல் செய்த நிலையில் கடந்த 26.02.2021ம் தேதி அசல் மனுவின் 4ம் எதிர்மனுதாரர்தரப்பில் மறுப்புரை தாக்கல் செய்யப்பட்டு, மேற்படி மறுப்புரையில் 1ம் எதிர்மனுதாரரின் ஓட்டுநர் தனது வண்டியை மெதுவாகவும் சாலை விதிகளை முறையாக பின்பற்றி ஓட்டி வந்தார் என்பதை அசல் மனுவின் 4ம் எதிர்மனுதாரர் தெள்ளத்தெளிவாக ஒப்புக் கொண்டுள்ளார். இந்நிலையில் மனுதாரர் தனது மனுவில் 3ம் எதிர்மனுதாரர் வாகனமானது சாலையில் நின்று கொண்டிருந்ததாகவும் பின்னால் வந்த 1ம் எதிர்மனுதாரரின் வாகனத்தை ஓட்டி வந்த ஓட்டுநர் அஜாக்கிரதையாகவும் வேகமாகவும் ஓட்டிவந்து 3ம் எதிர்மனுதாரரின் வாகனத்தின் பின்னால் மோதி விபத்து ஏற்பட்டதாகவும் மேற்படி விபத்து விபரமானது தங்களது புலனாய்வு அறிக்கை கிடைத்தபின்பு தெரிய வந்த நிலையில் கூடுதல் மறுப்புரை தாக்கல் செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டதால் மேற்படி மறுப்புரையை ஏற்பட்டதால் மேற்படி மறுப்புரையை ஏற்றுக் கொள்வதற்காக இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக சொல்வது ஏற்புடையதல்ல. எனவே இம்மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும்.

4. இம்மனுவில் தீர்க்கப்படவேண்டிய பிரச்சினை என்னவெனில் இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதே ஆகும்.

5. <u>தீர்வு:–</u>

மனுதாரர்தரப்பில் அசல் வழக்கில் கடந்த 04.07.2019ம் தேதி 2ம் எதிர்மனுதாரர்தரப்பில் வக்காலத்து தாக்கல் செய்வதற்காக வாய்தா ஏற்பட்டு,

இந்நீதிமன்றத்திலிருந்து 2ம் எதிர்மனுதாரருக்கு அனுப்பப்பட்ட அழைப்பாணையானது 2ம் எதிர்மனுதாரர் கிளை நிறுவனம் உள்ள கரூர் கிளை நிறுவனத்திற்கு அனுப்பப்பட்டு, அங்கிருந்து விருதுநகர் கிளைக்கு அனுப்பத் தவறியதால் 04.07.2019ம் தேதி 2ம் எதிர்மனுதாரரால் வக்காலத்து தாக்கல் செய்ய இயலவில்லை என்றும் அதனால் 04.07.2019ம் தேதி 2ம் எதிர்மனுதாரருக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றும் மேற்படி தவறானது வேண்டுமென்றே ஏற்பட்டதல்ல என்றும் எனவே இம்மனு அனுமதிக்கப்படவேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது.

6. எதிர்மனுதாரர்கள்தரப்பில் மனுவில் கூறியுள்ள சங்கதிகள் சட்டப்படி ஏற்புடையதல்ல என்றும் எனவே மனுத் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது.

7. இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. மனுதாரர்தரப்பில், இந்நீதிமன்றத்திலிருந்து அனுப்பப்பட்ட அழைப்பாணையானது தங்கள் நிறுவன வேறு கிளைக்கு அனுப்பப்பட்டு விட்டதால் தங்கள் கிளை நிறுவனத்தால் 04.07.2019 அன்று இந்நீதிமன்றத்தில் ஆஜராக இயலாமல் போய்விட்டதாகக் கூறியுள்ள நிலையில் எதிர்மனுதாரர்தரப்பில் மனுதாரரின் மனுவினை மறுத்து மறுப்புரை தாக்கல் செய்திருந்தாலும் மனுதாரரின் மனுவினை அனுமதிப்பதால் தங்களுக்கு என்ன பாதிப்பு ஏற்படும் என்பது குறித்து எவ்வித கூற்றும் கூறவில்லை. மேலும் மனுதாரரின் மனுவினை மறுத்து எதிர்மனுதாரர்தரப்பில் வேறு கடுமையான ஆட்சேபணை எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

8. மேலும் மனு ஆவணங்களைப் பரிசீலனை செய்ததில், அசல் மனுவில் 1ம் எதிர்மனுதாரர் வாகனம் விபத்து சமயத்தில் அதிவேகமாகவும் கவனக்குறைவாகவும் வந்து 3ம் எதிர்மனுதாரர் வாகனத்தில் மோதி அதே வேகத்தில் ரோட்டில் ஓரத்தில் சைக்கிளில் சென்று கொண்டிருந்த விபத்தில் இறந்துபோன அருணாச்சலம் மீது மோதி விபத்தில் அருணாச்சலம் இறந்துவிட்டதாகக் கூறப்பட்டு, விபத்தில் ஈடுபட்ட வாகனத்தின் உரிமையாளர் 1ம் எதிர்மனுதாரராகவும் மேற்படி வாகனத்தின் காப்பீட்டு நிறுவனம் 2ம் எதிர்மனுதாரராகவும் தரப்பினர்களாக சேர்க்கப்பட்டுள்ளனர். அசல் மனுவில் 2ம் எதிர்மனுதாரர் தோன்றாத்தரப்பினராக ஆகியிருந்தாலும் தற்போது நீதிமன்றத்தில் ஆஜராகி அசல் மனுவில் மறுப்புரை தாக்கல் பொருட்டு

இம்மனுவைத்தாக்கல் செய்துள்ளார். எனவே மனுதாரருக்கு வாய்ப்பளிக்கும் பொருட்டு மனுவின் தன்மை மற்றும் சூழ்நிலையைக் கருத்திற் கொண்டும் 04.07.2019ம் தேதி ஏற்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை நீக்கும்பொருட்டு தற்போது காலதாமதமாக இம்மனுவை தாக்கல் செய்துள்ளதைக் கருத்திற்கொண்டும் இம்மனு நிபந்தனையுடன் அனுமதிக்கத்தக்கது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

9. முடிவாக, மனுதாரர் எதிர்மனுதாரர்களுக்கு ரூ.1000/–த்தை செலவுத்தொகை யாக 07.02.2023ம் தேதிக்குள் செலுத்தும்பட்சத்தில் இம்மனு அனுமதிக்கப்படும் என்றும் தவறும்பட்சத்தில் இம்மனு தானாக தள்ளுபடி செய்யப்படும் என்றும் உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை செலுத்த வாய்தா 07.02.2023.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்துத் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் படித்துப் பார்த்து பிழைநீக்கம் செய்யப்பட்டு, இத்திறந்த நீதிமன்றத்தில் இன்று 27.01.2023ம் தேதி அவையறியப் பகரப்பட்டது.

V RAMALINGAM Digitally signed by V RAMALINGAM

சார்பு நீதிபதி,
அருப்புக்கோட்டை.

<u>மனுதாரர்தரப்பு சாட்சிகள், சான்றவாணங்கள் :_</u> இல்லை

<u>எதிர்மனுதாரர்தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள்:–</u> இல்லை

V RAMALINGAM Digitally signed by V RAMALINGAM

சார்பு நீதிபதி,
அருப்புக்கோட்டை.

சார்பு நீதிமன்றம், அருப்புக்கோட்டை
வ.வி.எண்.6/22 இன்
எம்.சி.ஓ.பி.எண்.64/2019
உத்தரவு நாள் – 27.01.2023